


நமது மதப்பற்றை உரை கல்லாகக்கொண்டு ஆண்டவன் நம்மை மதிப்பிடமாட்டான். நமது செயல்களின் சிறப்பைக் கொண்டே நம்மை எடைபோட்டுப் பார்ப்பான்.

**வால்டேர்.**


ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 1½
வெளி நாடு அணா 2

வாள் 2

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 21
4—6—49 சனிக்கிழமை

வீச்சு 40





சனாதனச் சழக்கர்களால் அடக்கி ஒடுக்கி நசுக்கப்பட்டுவரும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைப் பார்த்து நீங்களே அவர்களைவிட உயர்ந்தவர்கள் என்று நினைத்துக்கொள்ளுங்கள் என்று கர்மோபதேசம் புரிகிறார் சர்தார் படேல்! நினைத்துக் கொண்டால் போதுமா? நினைப்பிற்கேற்ப நிலைமை உயர்ந்திருந்தால்தானே நினைப்பிற்குப் பொருளுண்டு? நிலைமை உயர்ந்திட என்ன செய்திருக்கிறார் படேல் இதுவரை?

## அடைந்தே தீருவோம் திராவிடத் தனிநாடு!

Best copy available.




## தலையாட்டிப் பொம்மைகள்!

காஷ்மீர் சிற்றரசு இந்தியாவுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்திய அரசியல் அமைப்பு மன்றத்திற்கு காஷ்மீரிலிருந்து நான்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். இந்த நால்வரும் பொதுமக்களின் ஓட்டுகள் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுமக்களின் பிரதிநிதியாக டில்லி மன்றத்தில் வந்து வீற்றிருப்பதுதான் முறை. ஜனநாயகத் தத்துவத்திற்கு ஒத்த வழியும் இதுதான். ஆனால் பண்டிதநேரு என்ன கூறிவிட்டார் தெரியுமா? காஷ்மீர் மக்களால் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதா—செச்சே! அதெல்லாம் அவருக்குப் பிடிக்குமா? இந்த முட்டாள் ஜனங்களிடம் தேர்தல் உரிமையைக் கொடுத்தால் காங்கிரஸ் கட்சிக்குப் பிடித்தமில்லாதவர்களை அல்லவா தேர்ந்தெடுத்துத் தொலைத்து விடுவார்கள்! எனவேதான் நேரு, காஷ்மீர் பிரதிநிதிகள் நால்வரும் சாட்சாத் காஷ்மீர் மஹாராஜாவாலேயே நியமிக்கப்படவேண்டும் என்று கூறிவிட்டார்! இந்த ஜனநாயகக் கொலையை, அரசியல் அமைப்பு மன்றத்தில் கொலுவீற்றிருக்கும் காங்கிரஸ் பொம்மைகளில் ஒன்றாவது மறுத்துப் பேசவில்லையா என்று கேட்கிறீர்களா? ஊஹூம்! அதுதானே கிடையாது! நேரு, இந்தப் படியாக ஜனநாயகம் கொலை செய்யப்படத்தான் வேண்டும் என்று வாய்திறந்து பேசினாரோ இல்லையோ, உடனே ஆமாமாம் ஆமாமாம் என்று தலையை ஆட்டிவிட்டன அந்தக் கொலுப் பொம்மைகள்! "பிரதமர் நேரு சொல்வதற்கெல்லாம் தலையாட்டத்தான் தெரியுமே தவிர சிந்தித்துச் செயலாற்றத் தெரியாது என்றால் இதற்கு தினம் 45 ரூ அலவன்ஸ் வாங்கிக்கொண்டு இந்த வீராதி வீரர்கள் அங்கு வீற்றிருப்பானேன், விசையைத் தட்டியதும் தலையை வேண்டியபடி ஆட்டி வைக்கக்கூடிய செல்லுலாய்ட் பொம்மைகளை அங்கு வைத்து விட்டாலென்ன என்று கூறுகிறீர்களா? இதுவும் நல்லயோசனைதான்! உடனே அரசியல் அமைப்பு மன்றத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்துக்கு இந்த யோசனையை ட்ரங்க் டெலிபோன் மூலம் அனுப்பி வையுங்கள்—கட்டாயம் ஒப்புக்கொள்வார்!

## சமாதானமா— கிட்டே வராதே!

அகில உலகில் உள்ள மக்களும் சமாதானம் சமாதானம் என்று கூவுகின்றனர்; ஒழிக போராட்டங்கள், ஒழிக சண்டைகள் என்று முழக்குகின்றனர். ஆனால் டில்லியில் உள்ள நமது மதிப்பிற்குரிய ஜவஹர் சர்க்காரே, "சமாதானமா—நீ கிட்டே வராதே!" என்று கூறிவிட்டனர். சென்ற இரண்டு உலகப் போர்களில் ஏற்பட நாசத்தையும் உயிர்க்கொலையையும் நேரில் அனுபவித்த உலக மக்கள் இனி எந்தக் காரணம் முன்னிட்டும் உலகில் சண்டையே ஏற்படக்கூடாது என்று மனமார விரும்புகிறார்கள். இந்த விருப்பத்தை உலக ராஜதந்திரிகள் அனைவருக்கும் நினைப்பூட்டி, இனி ஒரு போர் வந்தால், மக்கள் அதை ஒப்பமாட்டார்கள் என்று அழுத்தந்திருத்தமாகப் போர் வெறியர்களுக்கு அறிவிப்பதற்காக, ஏப்ரல் இறுதியில் பிரஞ்சு நாட்டில் பாரிஸ் நகரில் ஒரு பிரம்மாண்டமான மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிற்கு உலகெங்குமுள்ள சிறந்த விஞ்ஞானிகள், ஒப்பற்ற அறிஞர்கள், நல்ல எழுத்தாளர்கள், உண்மை சோஷலிஸ்டுகள், பெரிய தலைவர்கள் அனைவரும் வந்து கூடியிருந்தனர். இந்த உலக சமாதான மாநாட்டில் இந்தியாவின் சார்பாகக் கலந்துகொள்ள இந்திய விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அறிஞர்கள் அடங்கிய ஒரு குழு இந்திய சர்க்காரை அனுமதி கேட்டது. "சமாதான மாநாடா — கிட்டே வராதே!" என்று பதில் கூறிவிட்டார்கள் இந்திய சர்க்கார். அதாவது, உலக சமாதான மாநாட்டிற்கு இந்தியப் பிரதிநிதிகள் போகக்கூடாது என்று 144 போட்டுவிட்டார்கள்! உலக சமாதானத்தைப் போற்றி வளர்த்து இனி ஒரு போர் உலகிடையே மூளாவண்ணம் பார்த்துக்கொள்வதுதான் இந்திய சர்க்காரின் அயல்நாட்டுக் கொள்கை என்று பிரதமர் பண்டிதர் ஆயிரம் முறை பேசியிருக்கிறார். ஆனால் இப்போதோ உலகசமாதான மாநாட்டுக்குச் செல்ல விரும்பிய இந்தியப் பிரதிநிதிகளுக்கு அனுமதி தர மறுத்துவிட்டிருக்கிறார் இந்த மாவீரர்! எப்படி இருக்கிறது பார்த்தீர்களா சர்க்கார் சமாதானத்தை வளர்க்கும் இலட்சணம்!

**தமிழன் தொடுத்த போர்!** ★ மா. இளஞ்செழியன் (B. A. Hons) தீட்டியது!

1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் எழில் மிகு சித்திரம் இந் நூல். மறுபடியும் போர்முரசு கொட்டப்படும் இந்நாளில் தமிழர் ஒவ்வொருவரும் இதனைப் படித்துணரவேண்டியது மிக மிக அவசியம் என்பதை சொல்லத் தேவையில்லை.

240 பக்கங்கள் விலை 1 12 0 . தபாலில் 2 0 0

பகுத்தறிவுப் பாசறை

147, பவழகாரத் தெரு :: சென்னை 1.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றல் சாத்தியமா? எல்லோருமா அம்பேத்காராகிவிட முடியும்? நல்ல வாய்ப்பு. 1999-ம் ஆண்டில் வாழ்வதாக அவன் எண்ணம்.

ஆனால் புரோகிதர் நினைப்பு அவனுக்குத் தெரியாது. கலப்பு மணத்தையும் கண்ணாவிக் கூத்தையும் ஆதரிக்க அவர் என்ன சீர்திருத்தக்காரர்கள் எழுதும் நாடகங்களில் தோன்றும் புரோகிதரா? தன் சகதர்மிணி கூறியதுபோலவே இந்த சங்கதியை வெளிப்போடாமல் கமுக்கமாய், ஏதோ காதும் காதும் வைத்ததுபோல ஒரு ஏழைப் பிராமணப்பையன் தலையில் இவளைக் கட்டியிருப்பார். ஆனால் அவர் இந்த சந்தர்ப்பத்தை வீணாக்க விரும்பவில்லை. புள்ளியை நழுவ விடவில்லை. லலிதா—ராமசாமி தொடர்பு, அவர் கண் முன் லக்ஷிமி—தேவதாஸ் காந்தி தொடர்பு; ருக்மணி—அருண்டேல் ஜோடி; ராதாபாய்-சுப்பராயன் தம்பதிகள், லக்ஷிமி—அம்பேத்கார் இணைப்பு ஆகியவைகளை மனதில் கொணர்ந்தது மட்டுமல்ல ராமசாமிக்குச் சொந்தமான நிலம் நீர் சொத்து, மனை ஆகியவைகளை அவர் கண் முன் கொண்டு வந்தது. ராமசாமியின் சொத்து இன்னும் இரண்டு தலைமுறைக்குப் பாடுபடாமல் தன் பரம்பரையைப் பாதுகாக்கும் என்பதை அவர் நன்கு தெரிந்திருந்தார். அவர் என்ன ஏமாந்துபோக அப்படி வடிகட்டின மடி சஞ்சியா?

உண்மையில் அவருக்கு மட்டும் அந்த பரந்த மனப்பான்மை இருக்குமேயானால் வரதன்-குப்பி திருமணத்திற்குச் சம்மதித்திருக்கமாட்டாரா? அதைக் கண்டித்தார், மறுத்தார். காரணம் அவள் ஏழை; அபலை. ஆஸ்தியோ அந்தஸ்தோ இல்லை. அவள் எக்கதியானாலும் அவருக்குக் கவலை இல்லை. கர்ப்பவதி குப்பி கைவிடப்பட்டாள்.

இப்போது தன் மகளுக்கும் அதே கதி ஏற்பட்டபோது அதை சமாளிக்கின்றார், லாப நஷ்டக் கணக்கிட்டுத் தனக்கு வரும் பெரும் லாபத்தை எண்ணி எண்ணி பெருமைப் படுகின்றார். தன் மகளின் சாதுரியத்தையும் அவளின் மோகன சக்தியையும் நினைத்துப் புளகாங்கித மடைகின்றார்.

திருமணம்! நல்ல தலைவரின் முன்னிலையில்! பெரும் பதவிப் பிரமுகர்களின் ஆசிச்செய்தி! பத்திரிகைகளின் பாராட்டு மலைபெனக் குவிந்தன. வாழ்த்துச் செய்திகள், வேறு ஓராயிரம்! இவைகள் லலிதாவிற்கு.

ஆனால் இதே காரியம் செய்த குப்பிக்கு கிடைத்தது ..? "விபசாரி! ஆள்மயக்கி! ஓடுகாலி! எவனையோ இழுத்துக்கொண்டு "ஓடிவிட்டாள்"—பலரகம்.

பாராட்டுச் செய்திகளுக்கிடையில் பரமானந்தத்துடன் திகழ்கின்றார் புரோகிதர். ஆனால் குப்பியின் தகப்பன் சாமிநாதன் மகள் மறைந்த அவமானம் வெளியே தலைகாட்ட முடியவில்லை. முடிவு—? மரக்கிளையிலே பிணமானான்.

ஏன் இந்த நிலை.? இது தான் இன்றைய சமுதாயம். நம்மவர் ஒரு காரியம் செய்தால் பழி- அவர்கள் செய்தால் பாராட்டு. நம்மவர் ஆடினால் சதிர்? அவர்கள் ஆடினால் பரத நாட்டியம்! நம்மவர் கலப்பு மணம் செய்தால் "அப்பன் பேர் கள் தெரியாததுகள்" "ஓட்டுமாங்கனிகள்" என்ற இழி சொல்! அவர்கள் செய்தால் (காரணம் எத்தன்மையதாயினும்) பாராட்டுதலுக்கிடையே நிகழும் கலப்பு மணம்"! என்ற புகழ்! இது தான் இன்றைய சமூதாயநிலை.

இப்படி எல்லாம் எண்ணமிட்டு ஏங்கினாள் கோகிலாவாக இருக்கும் குப்பி. ஆம்! ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், கண்ணீர் கலங்க தான் பெற்ற குழந்தையை சாவடியில் போட்டு விட்டுத் தற்கொலை செய்ய ஓடினாள், தற் செயலாகக் காப்பாற்றப் பட்டாள். அவர் அவளின் இசைச் சிறப்பையும் எழில் ஜோதியையும் கண்டு ஒரு சினிமா ஸ்டுடியோவில் சேர்த்தார் குப்பி கோகிலாவாக மாறினாள். பலரத்தினர் தொடர்பு-படிப்படியாக முன்னேறி விட்டாள். இன்று திரையுலக ராணி! செல்வத்தில் புரளுகின்றாள். என்றாலும் இன்றைய சமூதாய நிலையில் அவள் ஒரு "விபசாரி" தானே! அதுதான் அவளை வாட்டுகின்றது.

அதனால் தான் அவள் வரதனை- ஆம் எழிலழகன் என்ற மாறு பெயரில் உள்ள பழைய வரதனைக் கண்டவுடன் சோர்ந்து விட்டாள் அவள் சந்தேகம் சரியாகி விட்டது. சுவாமி மலையிலிருந்த அதே குடும்பம்தான் இன்றுகுடந்தை வந்துள்ளது. தன்னை வஞ்சித்த வரதனுக்கு சமூதாயத்திலே பெயர் தீவிரசீர்த்திருத்தவாதி! குமுறினாள்; சமூதாயத்தைச் சபித்தாள், வேறென்ன செய்வாள்? பெண் தானே!

எவ்வளவு வரதன்களும் குப்பிகளும் இன்றைய சமூதாயத்தில் இருக்கின்றார்களோ என்று எண்ணமிட்ட வண்ணம் சென்னை மெயிலில் அமர்ந்தாள் கோகிலா. ரயிலும் புகையை வெளிப்படுத்திக் கொண்டு கிளம்பி விட்டது.

———

விரைவில் வெளிவருகிறது!

# தேவ லீலைகள்

அறிஞர் அண்ணாதுரை தீட்டிய
மகோன்னத ஆராய்ச்சிச் சித்திரம்!

கம்பதாசர்களின் போதை தெளிய
அறிஞர் தந்தார் "கம்பரசம்!"
புராணிகர்களின் பித்தம் தெளிய
இதோ அண்ணா தருகிறார் "தேவ லீலைகள்"

**தமிழ்ப் பாசறை**

1, ராஜா அனுமந்த லாலா தெரு,
திருவல்லிக்கேணி :: சென்னை.

கற்பனைச் சித்திரம்

# தீவிர சீர்திருத்தவாதி

"முரா"

"லாவகமான நடிப்பு"

"ரஞ்சகமான வசனம்"

"கானக்குயில்"

"கலாதேவியின் அவதாரம்"

"ஜொலிக்கும் நக்ஷத்திரம்"

"திரையுலக ராணி"

**இது விமரிசகர்களின் பேனா முனை தந்த முடிவு.**

"நல்ல வசூல்"

"ரிலீஸாவதற்கு முன்னரே முதல்தேறிவிடும்"

"பாக்ஸ்ஆபீஸ் ஹிட் தான்"

"அவள் படமென்றால் கண்ணை மூடிக்கொண்டு முதல் போடலாம்"

**இது பட முதலாளிகளின் சர்ட்டிபிகேட்**

* * *

"ஏழைகளின் தோழி"

"பாட்டாளிகளின் ரட்சகி"

"பொதுஜன சேவகி"

**இது மக்கள் தீர்ப்பு**

* * *

**கோகிலா!** ரசிகர்களின் பூஜா மந்திரம். பட முதலாளிகளின் "ஸ்டார்வால்யூ" பட்டியலில் முதல் பெயர். பரோபகாரி.

அவள் ஓர் அழகிய நடிகை, பணத்திற்காக மட்டும் படத்தில் தோன்றும் பதுமையல்ல அவள். பரந்த உலக அனுபவம் உள்ளவள். படத்தின்மூலம் நாட்டிற்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்—இது அவளுடைய இலட்சியம்.

ஆகையால்தான் அவள் தேடிய அளவு கடந்த செல்வத்தை அறிவுப் பெருக்கத்திற்கான பொதுக் காரியங்களில் செலவழித்து உதவி வந்தாள்.

"ஆதித் திராவிட ஆரம்பப்பள்ளி நன்கொடை"—உதவிக் கச்சேரி—திருமதி கோகிலா கோஷ்டியார்.

"முதியோர் கல்விக்கழக உதவி நிதி"—கோகிலா அம்மையாரின் நடன அரங்கு.

"பெண்கள் பிரசவவிடுதி உதவி நிதி" — கோகிலா முன்னிலையில்... ...குழுவினரின் நாடகம்.

"அனாதை ஆஸ்ரம நன்கொடை" கோகிலா தலைமையின் கீழ் அனாதைப் பெண்களின் கதம்பக் கச்சேரி.

பல ரகத்திலே உதவி செய்தாள் கோகிலா. ஆகையினால்தான் அவளது குடந்தை வருகை ஒரு வாரத்திற்கு முன்பே தடபுடலாக இருந்தது. அதிகம் வளர்ப்பானேன் ஊரார் ஒவ்வொருவர் நாவிலும் நடமாடினாள் கோகிலா.

எழிலழகன்! அவனது சமத்துவ நோக்கத்தை மக்கள் பாராட்டினார்கள். சீர்திருத்தக்காரன். நல்ல பகுத்தறிவுவாதி. சமதர்ம நோக்குடையவன். ஊரில்பல பகுத்தறிவு வாதிகள் இருந்தாலும் அவன்பெருமை மனோரஞ்சித மலர் வேகத்தில் பரவிவிட்டது. காரணம் அவன் புரோகித பூவராகவாச்சாரியாரின் மகன். பழுத்த சனாதனக் குடும்பத்திலே பரந்த நோக்குடையவன் தோற்றம்! அதுதான் அவன் புகழுக்கு அடிப்படை. அவனை சீர்திருத்த உலகம் அறிய ஆரம்பித்ததே லலிதா—ராமசாமி திருமணத்தில்தான்.

**லலிதா!** அவன் தங்கை. ராமசாமி ஆதித்திராவிடன், ஆனால்நல்லகை. பெரும் புள்ளி. இந்த ஜோடிகளின் இணைப்பு தமிழகத்தையே ஒரு உலுக்கு உலுக்கியது.

பெரும்பதவியில் உள்ள பிராமணர்களின் ஆசீர்வாதம்; சீர்திருத்தவாதிகளின் வாழ்த்து; பத்திரிகைகளின் பாராட்டு — எவ்வளவோ விதம்!

அந்த சீர்திருத்தத் திருமணத்திற்குத்தான் இசைவிருந்தளிக்க வந்துள்ளாள் கோகிலா. எவ்வளவோ அலுவல்களுக்கிடையே கும்பகோணம் அழைப்பை அவள் உடனே ஏற்றுக் கொண்டது ஏதோ ஒரு தனி விசேஷத்தைத்தான் காட்டியது.

ஏராளமான கூட்டம். அந்த ஊரில் இதுவரை அவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லையென மக்கள் பேசிக்கொண்டனர். கோகிலாவின் அன்றைய நிகழ்ச்சி A1 தான். எனினும் அவள் முகம் மட்டும் சோபை இழந்திருந்தது. ஏதோ கடமையைத்தான் செய்வதாகக் காணப்பட்டாளேயன்றி களிப்பில்லை. அவள் மனதிலே ஏதோ பெரும் சுமை அழுத்திக் கொண்டிருந்தது.

கடைசீ கட்டம். இதுவரை பல அலுவல்களைக் கவனித்துக் கொண்டு அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்த எழிலழகன் மேடையில் தோன்றினான், பலர் அவனைப் பாராட்டினார்கள். கோகிலா தலை கவிழ்ந்தவாறே கேட்டுக்கொண்டிருந்தாள். முகம் சிந்தனையை வெளிப்படுத்தியது. கரம் அர்த்தமில்லாமல் கீழே போடப்பட்டிருந்த விரிப்பிலிருந்த ஒரு நூலை இழுத்துக்கொண்டிருந்தது.

எழிலழகன் நீண்டதோர் மாலையைப் போடவந்தான். நிமிர்ந்தாள் கோகிலா. இருவர் விழிகளும் சந்தித்தன, ஆ! என்ன அது? ஏன் கோகிலாவின் கண்கள் அப்படி மருண்டன? எதற்காக அவள் புருவங்கள் வில்லைப்போல் மேலெழுந்து தணிந்தன? நல்ல வேளை. இதை யாரும் கவனிக்கவில்லை. இறுதியில் வழக்கத்திற்கு மாறாக நறுக்காக ஒரு வார்த்தையில் நன்றி கூறிவிட்டு அமர்ந்தாள். உடனே தன் உடல் நிலை சரியில்லை எனக்கூறி நேரே தன் அறைக்குச் சென்றுவிட்டாள்.

* * *

சுவாமிமலை! கும்பகோணத்திற்கடுத்த கிராமம். அதுதான் புரோகித பூவராகவாச்சாரியாரின் பூர்வீகஸ்தலம். பரம்பரைத் தொழிலைப் பழுதின்றிப் பார்த்து வந்தார். சுவாமிமலை மட்டுமல்ல பக்கத்து ஊர்களிலும் கிராமங்களிலும் அவருக்கு நல்ல செல்வாக்கு! ஆசாரம் தவற மாட்டார்; அனுஷ்டானம் ஒன்றுமே குறைக்க மாட்டார். தொழில் துறையில் நல்ல சாமர்த்தியம். ஆளுக்குத் தகுந்த மாதிரி தன் அரை குறை ஆங்கிலத்தையும் இடையிடையே கலந்து பேசி, ஆசாரத்தையும் கைவிடாமல், உலகம் போகிற போக்கையும் உணர்ந்தவர் போல் நடித்து, உள்ள வரும்படியில் ஒன்றும்

குறைவில்லாமல் கறந்து, பச்சை சிரிப்பிலேயே பார்த்தவர்களையெல்லாம் தன் பஞ்சாங்கத்திலே சிக்க வைத்து மூச்சுவிடாமல் பேசும் அந்த "பாணி"யே அலாதி. அதனால் தான் அவர் இந்த சுயமரியாதை சகாப்தத்திலே புதிதாக ஒன்றும் சொத்து சேர்க்காவிட்டாலும் பூர்வீக பூஸ்திதியை கரைக்காமல் பார்த்துக்கொள்ள முடிந்தது.

சாமினாதன்! புரோகிதரின் நிலத்தைக் கவனித்து வந்த உழவன். புரோகிதருக்கு அவனிடம் நல்ல நம்பிக்கை உண்டு. ஆகையினால் தான் அவனுக்குத் தன்னுடைய வீட்டிற்கருகிலிருந்த காலி மனையில் ஒரு குடிசை கட்டிக் கொடுத்து வைத்திருந்தார்.

குப்பாயி! சாமினாதனின் ஒரே மகள். அவளுடைய இரண்டு வயதிலேயே தாய் இறந்து விட்டாள். செல்வமாக வளர்த்து வந்தான் சாமினாதன். சிறுவயதிலிருந்தே அவள் தன் இஷ்டப்படி ஓடி ஆடித்திரிந்து நன்கு வளர்ந்து வந்தாள். பகல் நேரம் முழுவதும் புரோகிதர் வீட்டில் வேலை செய்து தானும் அங்கேயே சாப்பிட்டுவிட்டு மாலை நேரத்தில்தான், இரவுக்கான சாப்பாட்டைக் கையில் எடுத்துக் கோண்டு வீட்டிற்குப்போய் விடுவாள். சாமினாதனுக்கும் புரோகிதர் வீட்டில் தான் சாப்பாடு.

கள்ளங் கபடமற்றவள். கலகலயென்று வேலை செய்வாள். சில சமயங்களில் தகப்பனுக்கு ஒத்தாசையாக வயல்களில் வேலை செய்வாள். குடியானவர்களிடத்திலே அவளுக்கு நல்ல கிராக்கி. காரணம் அவளுடைய நாடோடிப் பாடல்கள்! வயலில் வேலை செய்பவர்களுக்கு அவளது பாடல்கள் நல்ல "டானிக்" அந்த டானிக் மட்டும் கிடைத்துவிட்டால் போதும், அவர்கள் அயர்வு தோன்றாமல் வேலை செய்வார்கள்.

வரதன்! புரோகிதரின் புதல்வன். சிறுவயதிலேயே இலங்கைக்கு "ஓடிவிட்டவன்." நல்ல வாலிப தசையில் திரும்பி வந்துள்ளான். புதையல் கிடைத்தது போல் பூரிப்படைந்தார்கள் புரோகிதரும் அவரின் சகதர்மினி புவனேஸ்வரி அம்மையும்.

ஒரு நாள் விடியற்காலை பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்த குப்பியைப் பார்த்துவிட்டான். வைத்த விழிவாங்கவில்லை. அவ்வளவு எழில் அவள் மேல் பிரகாசித்தது. கட்டுப்பாடற்று வளர்ந்த கிராமப் பெண்ணல்லவா? நல்ல வாளிப்பான தேகம்; கட்டுமஸ்தான உடல்; சுருண்ட கேசம்; திரண்ட கன்னங்கள்; கரியவிழிகள்; வார்த்தெடுத்த இடை; வாலிபர்களை வசீகரிக்கும் தோற்றம், அதிலே சொக்கிவிட்டான் வரதன்.

ஒரு நாள் காலை மணி 8 ஆற்றிலே நீந்திக் கொண்டிருந்தாள் குப்பி. அப்பப்பா! என்ன அனாயாசமாகத் துள்ளிக்குதித்து நீந்துகின்றாள்! நல்ல தேர்ச்சி! வேப்பங் குச்சியால் பல்துலக்கிய படியே பார்வையை அவள் மேல் செலுத்தி அவள் அழகைப் பருகிக்கொண்டிருந்தான் வரதன்.

ஒரு நாள் மத்தியானம்! புரோகிதர் வீட்டுப் பரணியிலிருந்து வறட்டி எடுத்துக் கொண்டிருந்தாள் குப்பி. அவளுடைய கணீரென்ற குரலுடன் கூடிய கலகலப்பான பேச்சு காளையைக் கவர்ந்துவிட்டது.

ஒருநாள் மாலை! உள்ளூர்க் கோயில். குடியானப் பெண்களுடன் கோவிலில் கும்மியடித்துக் கொண்டிருந்தாள் குப்பி. கும்மி யடிக்கும்போது குலுங்கிய இடை, குஷாலான நடை; குளிர்ச்சியான சரீரம்—இவைகள் அவனை மெய்மறக்கச் செய்துவிட்டன. கடவுளை மறந்தான். கட்டழகி தியானம் தொடங்கினான்.

அவன் மேல் குற்றமில்லை. என்னென்னமோதான் செய்து பார்த்தான். பயனில்லை. அவளது ஒயில் நடை; ஒய்யார உருவம்-இவைகளை அவனால் மறக்கமுடியவில்லை. முடிவு-? அவள் வசமானான்.

ஒரு நாள் மத்தியானம் மூன்று மணி இருக்கும் அரை குறை தூக்கத்திலிருந்த வரதன் லேசான பாட்டு சப்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டான். ஜன்னலின் வழியே சப்தம் வந்த திசையில் பார்வையைச் செலுத்தினான், மெல்லிய குரலில் பாடிக்கொண்டே கிணற்றிலிருந்து நீர் இறைத்துத் தொட்டியில் நிறப்பிக் கொண்டிருந்தாள் குப்பி. வீட்டில் ஒருவரும் இல்லை. வரதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அறையை விட்டு வெளிக்கிளம்பி விட்டான்.

தன்மேல் இப்படி ஒரு ஆண் மகனின் கரம் தீண்டிக்கொண்டிருப்பதை வியப்பாகக் கருதவில்லை குப்பி. இப்போது புரிந்துவிட்டது அவளுக்கு புரோகிதர் மகனின் போக்கு. முதலில் கொஞ்சம் கலவரம் அடைந்தவள் போல காணப்பட்டாள். ஆனால் ஏனோ அவனிடமிருந்து அப்பால் செல்ல அவளுக்குத் தைரியம் வரவில்லை!

"கண்ணே...! கண்...ணே...!" மேலே பேசமுடியவில்லை. இடது கரத்தைத் தோள்மேல் போட்டுக் கொண்டு வலது கரத்தால் அவளது முகவாய்க் கட்டையை நிமிர்த்தினான்.

குப்பி நிமிரவில்லை. குனிந்த தலையுடனிருந்தாள். தொட்டியில் இருந்த நீரில் இருவர்களின் பிம்பமும் பிரதி பலித்தன—மௌனம்.

"கண்...ணே, உண்மையில் கூறுகிறேன் என்னைத் தவறாக நினைக்காதே. நான் உன்னை வெறும் உடலழகுக்காக விரும்புகிறேனில்லை...மனப் பூர்வமாகக் காதலிக்கின்றேன். நான் உன்னையே கல்யாணம் செய்வதாகவும் முடிவு கட்டிவிட்டேன்..."

"ஆ!"—வேறொன்றும் அவள் வாயினின்றும் உதிரவில்லை. வெடுக்கென்று அவன் பிடிப்பிலிருந்து விலகிக்கொண்டு திறந்த வாயுடனும் மலர்ந்த விழிகளுடனும் அவனை நோக்கினாள்.

"திடுக்கிடாதே...! தீர யோசித்த பின்தான் இந்த திடமான முடிவை அடைந்தேன். என்ன எதிர்ப்பு வந்தபோதிலும் சரி, நான் உன்னைக் கைவிடமாட்டேன். இது உறுதி..."

"ஸ்வாமி...நான் ஏழை...! குடியானப்பெண். நீங்க ஒசந்த ஜாதி ...என்னை..."

அவள் குரல் தழுதழுத்தது. குரலில் வழக்கம்போலிருக்கும் குறும்பெல்லாம் இப்போது காணப்படவில்லை.

என்னென்னமோ பேசினார்கள். முடிவு? — வரதன் அணைப்பிலே வஞ்சிக்கொடி துவண்டு கிடந்தாள்.

* * *

காலம் விரைந்தது.

அன்று மாலை ஒருவரும் வீட்டில் இல்லையென்பதைத் தெரிந்துதான் வந்தாள் குப்பி. புத்தகத்தில் புதையுண்டு கிடந்தான் புரோகிதர் மகன். தன்மேல் அல்லித்தண்டு போன்ற கரம் விழுந்ததும் திரும்பினான். செம்பொன்சிலை சிரித்துக் கொண்டு நின்றது.

"என்ன பழம்தானே"

(8-ம் பக்கம் பார்க்க)

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 வைகாசி 15
28—5—49 சனிக்கிழமை

# கோவை மாநாடு வழிகாட்டுகிறது!

**ஆயிரமாயிரம் மக்கள் திரண்டு கூடினார்கள்—அழகானதோர் ஊர்வலம் அற்புதமான முறையில் நடைபெற்றது—வீரத் தமிழர்கள் எழுப்பிய முழக்கம் இடியோசை என இருந்தது—மாநாட்டுப் பந்தலோ அழகின் திருவுருவாக இருந்தது—எண்ணற்ற தோரணங்களும் அலங்கார வளைவுகளும் கலர் கண்ணாடி பல்புகளும் புதுமோஸ்தர் சித்திரங்களும் அபாரம்—வரிசை வரிசையாக பேச்சாளர்கள் விதம் விதமாக முழக்கமிட்டனர்—மாநாட்டுத் தலைவர் அருமையான சொற்பொழிவாற்றினார்—மொத்தத்தில் மாநாடு மகோன்னதமான வெற்றி!—பத்திரிகைக்காரர்கள் எடுத்த போட்டோக்கள் மட்டும் இருபதுக்குக் குறையாது—நகரெங்கும் மாநாடு பற்றியே பேச்சு!**

எந்தக் கட்சியினர், எங்கே, எப்போது மாநாடு கூட்டினாலும், மாநாடு முடிந்த பிறகு, தங்கள் ஏடுகளிலே இதுபோலத் தீட்டுவர் அல்லது தங்கள் கட்சியினர் கூடும் இடங்களிலே இந்தப் 'பாணி'யிலே மாநாட்டுப் பெருமையைப் படம் பிடித்துக் காட்டுவர். சாப்பாட்டின் அருமை — பூமாலையின் பெருமை—நிர்வாகியின் திறமை—தலைவர்களின் எளிமை—கூட்டத்தின் பெருமை என்று இதுபோல உள்ள சிறப்புக்களைத்தான் வரிசை வரிசையாக எடுத்துக் காட்டுவர். தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாளிகைகளின் அழகையும் அகல நீளத்தையும், குளிப்பதற்கு இயற்கையாகவே அமைந்திருந்த ஆற்றின் வனப்பையும் தெளிநீரையும் புகழ்ந்து புகழ்ந்து பேசுவர். தங்குமிடத்திலிருந்து குளிக்குமிடத்திற்கும், குளிக்குமிடத்திலிருந்து தங்குமிடத்திற்கும், இரண்டு இடங்களிலிருந்து உணவுஇடத்திற்கும், அங்கிருந்து மாநாட்டுப் பந்தலுக்கும், பந்தலிலிருந்து இந்த மூன்று இடங்களுக்கும் மக்களை அழைத்துச் செல்ல தொண்டர்கள் தயாராக இருந்த சிறப்பைப்பற்றி இருபது வாரம் ஏடுகளில் எழுதுவர். ''அடடா! அவர் பேசினாரப்பா! அந்த நேரத்தில் மக்கள் 'ஆ' என வாயைப் பிளந்தவண்ணம் உட்கார்ந்திருந்த காட்சி இருக்கிறதே, அது அபாரம்! அபாரம்!'' என்று ஒருவர் கூறுவார்! கேட்டவுடனே மற்றொருவர், ''அது கிடக்கட்டுமய்யா ஒருபுறம்! உணவுப் பந்தலிலே வரிசை வரிசையாக, எண்ணற்ற வரிசைகள் அமைத்து உணவு பரிமாறினார்களே, அப்போது அருமையான மோர்குழம்பு ஊற்றினார்களே, அந்த மோர் குழம்பிலே உருளைக்கிழங்குத் துண்டுகள் இருந்ததே, எவ்வளவு ருசி தெரியுமா அடா! அடா! அடா!'' என்று வேகவேகமாகக் கூறுவார். ''செ! செ! இதென்ன! சாப்பாட்டிற்காகவா நாம் இவ்வளவு தொலைவு போனோம்! சாப்பாட்டைத் தள்ளுங்க சார் குப்பையிலே! அந்தப் பந்தலின் வாயிற்புறத்தை ஜோடித்திருந்தார்களே கனஜோராக, அதையல்லவா சொல்லிச் சொல்லி ஆனந்தப் படணும்! இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கலாம் போல் இருந்தது எனக்கு அந்தக் காட்சியைப் பார்த்தபோது'' என்று வேறொருவர் உடனே வேறுமொழி கூறுவார். ஒரு மாநாடு நடந்து முடிந்தால் அந்த இயக்கத்தவர்கள் மாநாட்டிற்குப் பிறகு இதுபோலத்தான் பேசிக்கொள்வது வழக்கம். மாநாட்டினால் ஏற்பட்ட உருவான பயன் என்ன, மாநாடு கூடுவதற்கு முன்னால் கட்சி இருந்த நிலைமைக்கும் மாநாடு முடிந்தபிறகு கட்சி இருக்கும் நிலைமைக்கும் என்ன வேறுபாடு, மாநாடு கட்சி வரலாற்றில் எந்த அளவுக்கு முக்யத்துவம் உடையது, மாநாட்டால் தீமை ஏதேனும் ஏற்பட்டிருக்கிறதா என்று இதுபோல உண்மையான இலாப நஷ்டக் கணக்கைப் போட்டுப் பார்க்கும் வழக்கம் மிக மிகச் சிலருக்கே உண்டு. பெரும்பாலோருக்கு இதுபோன்றதோர் கணக்கைப் போட்டுப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம்கூட ஏற்படுவதில்லை. இந்நாட்டில் பற்பல கட்சியினரால் நடத்தப்படும் பற்பல மாநாடுகளில் பெரும்பாலானவற்றிற்கு இத்தகைய கணக்கைப் போட்டுப் பார்க்கவும் முடிவதில்லை—காரணம், அந்த மாநாடுகள் உண்மையில் மாநாடுகளாக இருப்பதில்லை, வெறும் உற்சவங்களாகத்தான் இருக்கும்! உற்சவங்களுக்கு உருவான பயன் எவ்வளவு என்று யார்தான் கணக்குப் போட்டுப் பார்க்க முன் வருவார்கள்? எப்படித்தான் போட்டுப் பார்க்க முடியும்?

ஆனால் சென்ற கிழமை கோவையில் நடைபெற்ற கோவைமாவட்ட திராவிடர் கழக மாநாடு, வழக்கமாகக்கூடிக்கலையும் கருத்தற்றமாநாடுகளின் பட்டியலிலே தானும் சேர்ந்து, 'பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று' என்ற பழமொழிக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையாமல் உண்மையிலேயே திராவிடக் கழகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் பெருமையும் பூரிப்பும் அடையும் விதத்திலே நடந்துமுடிந்திருக்கிறது என்பதைக் காண நாம் மிக மிக மகிழ்ச்சியடைகிறோம். கோவை மாநாடு திராவிடக் கழக வரலாற்றிலேயே மிக முக்கியமானதோர் அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது. இயக்க வரலாறு எழுதப்படும்போது—அதை எழுதுபவர்கள் யாராக இருந்தாலும் சரி, அது எழுதப்படும் காலம் எதுவாக இருந்தாலும் சரியே—அந்த வரலாற்றில், கோவை மாநாடு, உன்னதமானதோர் இடத்தைப் பெறுவது உறுதி.

திராவிடர் கழகம் பாட்டாளிகளின் இயக்கம். பாட்டாளிகளின் நன்மைக்காக, பாட்டாளிகளால் நடத்தப்படும் பாட்டாளிக் கழகம், திராவிடர் கழகம். இதிலே சேர்ந்து பணியாற்றி வரும் பாட்டாளிகளின் தொகை நாளுக்கு நாள் ஆயிரம் பதினாயிரம் நூறாயிரம்

என்ற விகிதத்திலே பெருகி வருகிறது. ஆலைத் தொழிலாளிகள், கூலிவேலை செய்பவர்கள், கை வண்டி இழுப்பவர்கள், மீன் பிடித்து வாழ்பவர்கள், உழவுத் தொழில் புரிபவர்கள், கட்டை வெட்டிப் பிழைப்பவர்கள், தச்சு வேலை செய்பவர்கள் முதலான எண்ணற்ற துறைகளில் பணியாற்றிவரும் உழைப்பாளிகளில் பெருந் தொகையினர், தங்களின் சொந்த சொத்தாக எண்ணி, திராவிடர் கழகத்தைக் கண்ணின் மணியெனப் போற்றி வருகின்றனர். இவ்வண்ணம், கழகம், பாட்டாளி மக்களின் அன்பையும் ஆதரவையும் பரிபூரண ஆசியையும் பெற்று வளர்ந்து வருகிறது என்ற போதிலும், **கழகக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த திராவிடத் தொழிற்சங்கங்கள் தனியாக இல்லாத காரணத்தால்**, கழகக் கொள்கைகளையே தம் இருதய கீதமாகக் கொண்ட தொழிலாளர்கள்கூட, தொழிலாளர்களை மட்டும் பாதிக்கும் தனிப்பட்ட பிரச்சினைகள், அதாவது தங்கள் மில்லை மட்டுமோ, தங்கள் பண்ணையை மட்டுமோ, தங்கள் அலுவலகத்தை மட்டுமோ பாதிக்கும் பிரச்சினைகள் எழும்போது தங்கள் கொள்கைக்கு மாறான, மாற்றுக் கட்சியினர் நடத்தும் தொழிற் சங்கங்களிலேயே சேர்ந்து தீரவேண்டிய நிலைக்கு உள்ளாகி விடுகிறார்கள். திராவிடத் தொழிற் சங்கங்கள் ஒவ்வொரு தொழில் துறைக்கும் தனித் தனியே அமைக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றி வருமானால் இந்த சங்கடமான நிலைமை நம் கொள்கைகளை ஒப்புக்கொள்ளும் தொழிலாளத் தோழர்கட்கு ஏற்படாது. அதோடு, தொழிலாளிகளுக்கு திராவிடர் கழகம் இப்போது செய்ய முடிவதைவிட இன்னும் அதிகமான அளவில் நன்மை செய்வதற்கும், இதுதான் சிறந்த வழி. தொழிலாளிகளிடம் கழகக் கொள்கைகள் பரவி அவர்கள் வாழ்வு வளமடைய வேண்டுமானால் திராவிடத் தொழிற்சங்கள் ஏற்பட்டே தீரவேண்டும்.

ஊருக்கு ஊர் **திராவிட மாணவர்** கழகங்கள் அமைக்கப்பட்டு, கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும், திராவிட மாணவர்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்றுபட்ட பிறகே, திராவிட மாணவர்களுக்கு நல்ல செல்வாக்கும், வசதிகளும், கல்லூரி நுழைவு அனுமதியும், கூட்டுப் பொறுப்பு உணர்ச்சியும் ஏற்படலாயின. திராவிட மாணவர் கழகங்கள் நாடெங்கும் ஏற்பட்ட பிறகுதான், ஆரிய ஆசிரியர்களும் ஆரியத் தலைமை ஆசிரியர்களும ஆரிய இன்ஸ்பெக்டர்கள்—கல்வி அதிகாரிகளும் தங்கள் இறுமாப்பான போக்கை ஓரளவுக்கு குறைத்துக் கொண்டனர். திராவிட மாணவர்களுக்கு முன்னரெல்லாம் காட்டப்பட்டுவந்த இன இழிவும் அவமானமும் அவமரியாதையும மாணவர் கழகங்கள் ஏற்பட்ட பிறகு முற்றிலும் மறைந்துவிட்டன என்று துணிந்து கூறுவதற்கு முடியாவிட்டாலும் பெருத்த அளவுக்குக் குறைந்துவிட்டன என்பதைத் தைரியமாக எடுத்துக்கூறலாம். திராவிட மாணவர் கழகங்கள் மட்டும் ஏற்படாமல் இருந்திருந்தால், திராவிட மாணவர்களுக்குள்ளே இன்று இருப்பது போன்ற இவ்வளவு கூட்டுத் தோழமை உணர்ச்சியும், பலமும், கட்டுப்பாடும் ஒருபோதும் இருந்திருக்க மாட்டா.

இதுவேபோலத்தான், திராவிடர் இயக்கத் தொழிற்சங்கங்கள் நாடெங்கும் ஏற்பட்டு, இப்போதே ஸ்தாபனரீதியாகத் திரளவேண்டும் என்ற உணர்ச்சி பெற்றிருக்கும் ஆலைத் தொழிலாளிகள், அச்சுத் தொழிலாளிகள் போன்ற பாட்டாளிகளையும், ஸ்தாபனரீதி என்றால் என்ன என்பதையே அறியாத கட்டைவெட்டிகள் தச்சு வேலையாளர்கள் சுண்ணாம்பு பூசுபவர்கள் கைவண்டிக்காரர்கள் போன்ற தொழிலாளிகளையும் ஒன்று திரட்டி, சிறந்த பணியாற்றும் நிலை ஏற்பட்டுவிட்டால், பிறகு, ஒரு சில ஆண்டுகளுக்குள்ளாக இந்தப் பாட்டாளிகளின் நிலைமை சிறந்து பொலிவது உறுதி.

கோவை மாநாடு, திராவிட இயக்க அடிப்படையில் தொழிற் சங்கங்களை நிறுவி, பாட்டாளிகளின் பட்டாளத்தை ஒன்று திரட்ட வேண்டும் என்ற இந்த உன்னதமான செயல் திட்டத்தை, **முதன் முதலாக**, தீர்மான வடிவில் நிறைவேற்றி இருக்கிறது. "திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தொழிலாளத் தோழர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் பேரால் உள்ள தொழிற் சங்கங்களில் உறுப்பினர்களாகிச் சிதறி இருப்பதை நீக்கி, திராவிட இயக்கத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற் சங்கங்களை ஏற்படுத்துவதற்கான அமைப்பு முறை வேலைகளை உடனடியாகத் துவக்கும்படி மாகாண திராவிட கழக நிர்வாகக் கமிட்டியை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது" என்பதாக, கோவை மாநாட்டில் நிறைவேறியுள்ள சிறந்த தீர்மானத்தைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். இந்த அரிய தீர்மானத்தை நிறைவேற்றியதன் வாயிலாக, கோவை மாநாடு, கழக வரலாற்றிலே ஓர் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுவிட்டது என்று நாம் இத் தலையங்கத் தொடக்கத்தில் கூறியதை யாரும் மறுக்கமுடியாது.

விரைவில் பெரியார் அவர்கள், நிர்வாகக் கமிட்டியைக் கூட்டி, இந்தத் தீர்மானத்தை அங்கீகரித்து, இதனை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான செயல் திட்டங்களை நமக்கு வகுத்துத் தருவார் என நம்புகிறோம். பெரியார் அவர்கள் இதுவரை தொடங்கியிருக்கும் எந்தப் பணியும் முழு வெற்றி தராமல் போனதில்லை. எனவே இப்போது அன்னார் தொடங்கவிருக்கும் இந்த தொழிற்சங்க அமைப்புப் பணியும் மிக விரைவில் முழுமை எய்தும் என்பது திண்ணம்.

**வெல்க பெரியார் முயற்சி! அமைக நாடெங்கும் திராவிடர் இயக்கத் தொழிற்சங்கங்கள்! மலர்க சமதர்ம ஆட்சி! எங்கணும் எழுக பொதுவுடைமைக் கீதம்! வாழ்க நல்வழி காட்டிய கோவைமாநகர்! வாழ்க மாநாட்டு அமைப்பாளர்! வாழ்க திராவிடம்!**

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

"எங்கே?"

"அவர்கள் செல்லும் இடத்திற்கு!"

"அவர்கள் குதிரையின் மீதல்லவா செல்கிறார்கள்! அவர்களை நாம் எப்படிப் பின் தொடரமுடியும்?"

"குதிரைகளின் காலடிச் சுவடுகளைப் பார்த்துக்கொண்டே செல்லலாம், வா?"

இருவரும் புறப்பட்டனர்!

(தொடரும்)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"........................"

"ஏன் மௌனம்."

மீண்டும் அதே நிலை. அவளை அடிமுதல் முடிவரைப் பார்த்தான் வரதன்.

"ஏன்ன?! ஏன் அப்படி விழிக்கிறீர்கள்...ஒரு வேளை..." வார்த்தையை முடிக்கவில்லை. குரலில் கலவரம் தோய்ந்திருந்தது.

புத்தகத்தை மூடிவிட்டு கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு கவிழ்ந்த தலையுடன் அறையின் மேலும் கீழும் உலாவினான் வரதன்.

"ஏன் இப்படி என்னை வதைக்கின்றீர்கள். என்னால் பொறுக்க முடியவில்லையே! உங்களுக்குக் கோடி புண்யம். ஜல்தி பதில் சொல்லுங்கள்."

கைகளைப் பிசைந்த வண்ணம் கதறினாள். வார்த்தையில் சோகம் குழைந்திருந்தது.

நிதானமாக வாய்திறந்தான் வரதன். ஏதேதோ சொன்னான். என்னென்னமோ நடந்தது. அரண்மனையில் துஷ்யந்தன் சகுந்தலையை அடையாளம் புரியாமல் கைவிட்டானே அந்தக் கட்டம் தான்.

பாவம்! கர்ப்பிணி குப்பி கைவிடப்பட்டாள். வஞ்சக வரதன் வைதீகத் தந்தைமேல் பாரத்தைப் போட்டு விட்டு அவளை மணம் செய்ய அனுமதி கிடைக்கவில்லையென்று கூறிவிட்டான். அவன் பேசிய காதல் பேச்சு; காந்தர்வ விவாகம்; காதல் இன்றேல் சாதல் என்ற தத்துவம் இவை எல்லாம் கட்டழகி குப்பியின் எழிலைப் பருகும் வரையில் தான்போலும்!

குப்பாயி! அபலை! என்னென்னமோ மனக்கோட்டை கட்டியிருந்தாள். பெரிய ஜாதிப் பையலைத் தன் கைக்குள் போட்ட சாமர்த்தியத்திற்காகத் தன் அழகைப்பற்றி அபார ஜம்பமடித்துக் கொண்டிருந்தாள். ஏமாந்தாள். பாவம். பேதை, பழியைத் தாங்க முடியாது தவித்தாள்; ஏசினாள்; சபித்தாள்; ஏதேதோ ஆத்திரமாகத் திட்டினாள். பலன்—? தகப்பன் முகத்தில் விழிப்பாளா?—அவமானத்திற்குஅஞ்சி அன்று இரவே எங்கேயோ "ஓடிவிட்டாள்."

* * *

" இல்லேடிம்மா இல்லே. நன்னா யோசனை செய்தானப்றம்தாண்டி இப்படி சொல்றேன். நீ என்னை என்ன நெனச்சுண்டு அசட்டு பிசட்டுன்னு உளர்ரே."

" ரொமப நன்னாருக்கு போங்கோ! நீங்களுமாச்சு, ஒங்க முடிவுமாச்சு. நேக்கென்னமோ நீங்க செய்றது துளியானும் பிடிக்கல்லே, நாளைக்கி நாலு பொம்மனாட்டிங்க முகத்லே முழிக்கிறதா இல்லே நாக்கைப் பிடுங்கிண்டு சாகரதா?'

" அடி அசடே, லோகம் இருக்கிற மாதிரி தெரியாமே உளரறயே. ஏண்டி, என்னை என்ன அவ்வளவு முட்டாள்னு நெனச்சே! நம்ம ஆசாரம், அனுஷ்டானம், இதெல்லாத்தையும் விட நம்ம பொழப்பையே பாதிக்றசமாச்சாரமாயிருந்தும் நான் இதிலே மனப்பூர்வமா சம்மதிக்றேன்னா லாபமில்லாமேயாடி "

" என்ன லாபமோ லாபம்! நல்ல கண்ராவி! சிறுசுகள் லோகம் தெரியாமெ ஏதோ உளறுதுகோன்னா அதெக் கேட்டுண்டு நீங்களும் ஆட்ரேளே ."

" சோழியன் சிண்டு சும்மாவா ஆடும்? நன்னா வரவு செலவு கணக்கு போட்டப்றம்தாண்டி இந்த முடிவுக்கு வந்திருக்கேன். தோ பாரு! இந்தக்காரியத்தை செய்யறதனாலே நம்மை யென்ன ஜாதியை விட்டுத் தள்ளிடுவான்னுநெனைக்றே ஒருக்காலும் அப்படி செய்ய மாட்டா. ஒத்தருக்கும் அந்த தைர்யம் வராது. இந்தப் பாரு புவனா! இந்தக்காரியம் செய்றதனாலே லோகத்திலே நம்ப நிலமை ரொம்ப உசந்து போய்டும். பாக்றவா நம்மை ரொம்ப கௌரவமா மதிப்பா! சூனாமானாக்காராளும் நம்மைப் பாராட்டுவா! காங்கிரஸ் கட்சிகாராளும் நம்மைப் பாராட்டுவா! ரெண்டு கக்ஷிகாராள் கிட்டவும் செல்வாக்கு; பத்திரிகைக்காரான்ளாம் நம்மைப்பத்தி பிரமாதமா எழுதுவா! நம்மக் குடும்பத்துக்கு நல்ல விளம்பரம். அதெக்கொண்டு நம்ம வரதன் என்னென்னமோ சாதிச்சுடுவான். இப்படி நமக்கு என்னென்னமோ வர இருக்கச்சே நீ என்னடான்னா சுத்த பத்தாம் பசலிமாதிரி பேத்திண்டு திரியறயே."

" நேக்கென்னமோ ஒங்க "பாலிசி" புரியலை போங்கோ. ஏதோ சிறிசுக தப்புத் தண்டாவா நடந்தா ஒத்தருக்கும் தெரியாமெ நம்ம ஜாதியிலே ஒத்தரண்டை சம்மதம் செய்துண்டா நிம்மதியாயிருக்கும்னு நெனெச்சேன். நீங்க என்னடான்னா......"

"என்னவாம்...நானும் தான் சேதி காதலே விழுந்ததும் அப்படி நெனச்சேன். காரியம் மிஞ்சிப் போனப்றம் தாண்டியம்மா இந்த முடிவுக்கு வந்தேன். அவ மூனு மாசமா ஸ்னானம் பண்ணலேன்னு இருக்கா! உஸ்...வெளியே சொல்லித் தொலையாதே, இந்தா! இப்படி பார். ஒருவிதம் நன்னாயோசனை செய்தப்புறம் தான் நான் இந்த முடிவுக்கு வந்துட்டேன், நீ பட்லை தெய்வமேன்னு கெட. நான் எல்லாத்தையும் பார்த்திக்றேன், நீ இதிலே அனாவஸ்யமா தலையிட்டு மனதை அலட்டிண்டு என் வாய்லே மண்ணைப் போட்டுடாதே."

வெற்றிகரமான பார்வையுடன் ஒரு சிமிட்டா பொடியை உறிஞ்சிவிட்டு பூணூலை உருவிவிட்ட வண்ணம் வரதனைத் தேடிக்கொண்டு சென்றார் புரோகித பூவராகவாச்சாரியார்.

விவாதம்; திட்டம்; தீர்மானம்—இவைகள் புரோகிதர் மனமுவந்து செய்யப்போகும் ஒரு கலப்பு மணத்தைப் பற்றியது. வரதன் குப்பாயி திருமண மல்ல! லலிதா ராமசாமி வாழ்க்கை ஒப்பந்தம்!

லலிதா! அவள்தான் புரோகிதரின் மகள். ராமசாமி-பக்கத்தூர் மிராசு! அரசலாற்றிலே அடிக்கடி சந்திப்பு, அதன் முடிவு—? லலிதா மூன்று மாத கர்ப்பவதி. புரோகிதா குடும்பத்திற்கு விஷயம் புரிந்தது. புலம்பினார்; பிதற்றினார். ஒன்றும் புரியவில்லை. என்ன நினைத்தாரோ என்னமோ லலிதா-ராமசாமி வாழ்க்கை ஒப்பந்தம் ஏற்பாடு செய்துவிட்டார்.

இந்த ஜோடிக்கே இது ஆச்சர்யமாகத்தானிருந்தது. காதல் இணைப்பு என்றுகூட இதைக்கூற முடியாது. ராமசாமி விரும்பியது லலிதாவின் உடலை! லலிதா நாடியது ராமசாமியின் மணிபர்சை! ஏதோ இலைமறைகாயாக இருக்கும் என்று எண்ணினார்கள்—உலகத்தில் எவளவோ இருப்பதுபோல! ஆனால் விளைவு வேறுவிதமாய் விட்டது.

ராமசாமிக்குத் தன்னை நம்ப முடியவில்லை. மகிழ்ச்சிப் பெருக்கிலே தன்னை மறந்திருந்தான். பின் என்ன? ஆதித்திராவிட குடும்பத்தில் தோன்றிய அவனுக்கு அய்யர் வீட்டு அணங்கு கிடைப்ப

(3-ம் பக்கம் பார்க்க)

# ஏன்? எப்படி? எதற்காக?

★

## கேள்வியும் விடையும்

★

[ இளஞ்செழியன் ]

**1. பகுத்தறிவைத் துணையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று சொல்லும் தாங்கள் வாழ்க்கை என்பது எப்படி இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?**

வாழ்க்கை ஒரு பூந்தோட்டமாக இருக்கவேண்டும், பாலைவனம் போல் இருக்கக் கூடாது. ஆனால் இன்றையதினம் உள்ள சமுதாய அமைப்புமுறைப்படியோ, வாழ்க்கை, ஒரு சிலருக்குத்தான் பூந்தோட்டமாக இருக்கிறது. ஏனைய பெரும்பாலான மக்களுக்கோ வெறும் பாலைவனமாகத்தான் காட்சி அளிக்கிறது. விரைவில் இந்த நிலை மாறி, வாழ்க்கை என்பது, எல்லோருக்குமே தித்திக்கும் தேனாக மாறும் நிலை உண்டாக வேண்டும். இந்த இன்பப் புதுநிலை உண்டாக வேண்டுமானால் முதலில் சமதர்ம ஆட்சி நிறுவப்பட்டாகவேண்டும். சமதர்மமணம் கமழும் சமுதாயத்தில்தான், வாழ்க்கை, அதன் முழு இன்பத்தையும் மக்களுக்குத் தரமுடியும். எனவேதான் திராவிடக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள், மக்கள் வாழ்க்கை சமதர்ம வாழ்க்கையாக இருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறிவருகிறோம். கூறிவருவது மட்டுமல்ல, அத்தகைய சமதர்ம ஆட்சியை நிறுவுவதற்குத் தேவையான சூழ்நிலையையும் உருவாக்கி வருகிறோம்.

**2. திராவிடக் கழகத்திற்கு தமிழ் நாட்டில் நல்ல செல்வாக்கு இருப்பதால், அடுத்து வரும் பொதுத் தேர்தலில் ஈடுபட்டு, வெற்றி பெற்று, தமிழ் நாட்டை சோவியத் ரஷ்யா போன்ற பொதுவுடமை பூமியாக ஆக்க கழகம் ஏன் முன்வரக்கூடாது?**

"பொதுவுடமை பூமி" ஒரு சாதாரண பொதுத் தேர்தல் மூலமாக மட்டும் உருவாகிவிடக்கூடிய அவ்வளவு எளிதான இலட்சியமல்ல. நாம் தேர்தலில் ஈடுபட்டு, சர்க்காரைக் கைப்பற்றி, பொதுவுடமை ஆட்சியை நிறுவத் தொடங்கினால் உடனே, அந்த ஆட்சியை ஒழித்துக்கட்ட பலம்பொருந்திய முதலாளித்துவ சக்திகள் முழுமூச்சுடன் ஈடுபடும்; இந்த நாட்டில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மக்களை ஆளடிமைகளாக ஆக்கிவைத்திருக்கும் வர்ணாஸ்ரம விரியன் பாம்புகள் புதிய ஆட்சியைச் சுற்றி வளைத்து அடித்துக்கொன்றுவிடப் பார்க்கும். நம் மக்கள் உள்ளத்தில் வேரூன்றிப்போய் இருக்கும் மதப்பித்து, உடனே வர்ணாஸ்ரம விரியனுக்குத் துணைபோகும். பிறகென்ன? கேட்கவா வேண்டும்? நாம் அமைக்கும் பொதுவுடமை சர்க்கார் மூன்றே நாட்களில் சரிந்து போகும். இப்படியின்றி நாம் அமைக்கும் பொதுவுடைமை நல்லாட்சி நிலைத்து நின்று நற்பயன் நல்கவேண்டுமானால், அந்த ஆட்சியை நாம் அமைக்கும்போது, அந்த ஆட்சியை எதிர்த்து எழுகின்ற எண்ணற்ற எதிர்ப்புப் புயல்களைத் தாங்கும் மகத்தான மன உரம் மக்களிடம் இருந்தாகவேண்டும். முதலாளிக்கூட்டத்தின் பணக்குண்டு, வர்ணாஸ்ரம வெறியர்களின் தலைவிதி தத்துவம், மதம் எனும் அபினின் மயக்கச் சக்தி, பரம்பரைப் பழக்க வழக்கங்களின் மூடக்குவாதம் ஆகிய இவ்வளவுக்கும் அஞ்சாமல் நிமிர்ந்து நின்று, இத்தனை எதிர்ப்புகளையும் தொகையாக எதிர் நிறுத்தித் தூள் தூள் ஆக்கி, பொதுவுடமை ஆட்சியே—வருக வருக என்று கூறி, அந்த ஆட்சியை நிலைக்கவைக்கும் போராற்றல் மக்கள் மன்றத்தில் எக்களிக்கவேண்டும். இத்தகு போராற்றலை மக்கள் மன்றத்தில் தவழவிட்டபிறகு, பொதுவுடமை ஆட்சியை நாம் அமைத்தால்தான் அது நிலைக்குமே தவிர, இந்தப் போராற்றல் மக்களிடம் இல்லாத நிலையில் நாம் இந்த முயற்சியில் இறங்கினால், எந்த மக்களின் நன்மைக்காக நாம் பொதுவுடமை ஆட்சியை நிறுவுகிறோமோ அந்த மக்களையேகூட நம்மீது ஏவிவிடும் "சக்தி" ஏற்பட்டு விட்டக்கூடும் சமுதாயவிரோதிகளுக்கு! எனவேதான் கழகம், மக்கள் மனதிலே படிந்திருக்கும் வர்ணாஸ்ரமப் பித்தத்தை அகற்றுவதிலேயும், பழமைத் தத்துவங்கட்குச் சம்மட்டி அடி கொடுப்பதிலேயும் புரட்சி ஆர்வத்தையும் புதுமை உணர்ச்சியையும் மக்களுக்கு ஊட்டுவதிலேயும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. இந்த அரிய பணிகளின் விளைவாக மக்கள் உள்ளம் போதுமான அளவுக்கு பலமும் பக்குவமும் பெற்றுவிட்டது என்று தெரிந்தால், உடனே தேர்தலில் ஈடுபட்டு, வெற்றித் திருவின் தோள்களைத் தழுவி பொதுவுடமை ஆட்சியை நிறுவ, கழகம் கணநேரமும் தயங்காது. மக்கள் மனம் நாம் குறிப்பிடும் இந்த அளவுக்கு உரம் பெற்றுவிட்டது என்று கூறுவதற்கில்லை—ஓரளவுக்குத்தான் திண்மை பெற்றுள்ளது மக்கள் உள்ளம். இது போதாது. எனவேதான் கழகம் இப்போது தேர்தலுக்கு நிற்காது. கோவை மாநாட்டிலும், அதற்கு முன்னர் நடைபெற்ற கோவை மாவட்டப் பொதுக் கூட்டங்களிலும், தலைவர் பெரியார் அவர்கள் இந்த உண்மைகளைத் தெள்ளத் தெளிய விளக்கியிருப்பதையும் இங்கு நினைப்பூட்ட விரும்புகிறேன்

**3. காமன்வெல்த்தில் சேராத பர்மாவுக்கு காமன்வெல்த் நாடுகள் பணஉதவியும், போர்க்கருவிகள் உதவியும் செய்யப்போவதாகத் தெரிகிறது. இதற்கு என்ன காரணம்?**

சீனாவில் பரவியுள்ள சிவப்பு விரைவில் பர்மா முழுவதும் பரவி விட்டால் என்ன செய்வது என்ற அச்சம்தான் காரணம், வேறொன்றுமில்லை. ஆஸ்திரேலியா, கனடா, நியூஜிலாந்து, தென்னாப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய இந்த ஏழு நாடுகளுந்தான் காமன்வெல்த் நாடுகள் என்று அழைக்கப்படுபவை, இவற்றில், முதல்நான்கு நாடுகளும், இரத்தபாசத்தின் காரணமாக பிரிட்ட[illegible]

கட்டுண்டவை. கடைசிமூன்றுநாடுகளோபொருளாதாரப் பிற்போக்கு, சொந்த பலவீனம், ஆட்சித் தலைவர்களின் தவறான போக்கு ஆகிய இவற்றின் காரணமாக பிரிட்டனுடன் கட்டுண்டவை. காரணம் எதுவாக இருந்தாலும், இந்த ஏழு நாடுகளும், "பிரிட்டிஷ் சிங்கம்" போகும் பாதை வழியே சென்றுதீர வேண்டிய நிலைமைக்குத் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த ஏழு நாடுகளும் பிரிட்டனுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன என்றால், பிரிட்டன், அமரிக்க டாலருக்குக் கட்டுப் பட்டிருக்கிறது. அமெரிக்க டாலர்கள் பிரிட்டனுக்கு கிடைக்காவிட்டால் பிரிட்டனின் வாழ்க்கைச் சக்கரம் ஓடாது. எனவே அமெரிக்கா கட்டளையிடுவதற் கேற்ப நடந்துதீர வேண்டிய சுதந்தரமற்ற நிலையில் நிற்கிறது பிரிட்டன். அமெரிக்காவோ, அது யாருக்கும் கட்டு பட்ட நிலையில் இல்லை என்ற போதிலும், அகில உலகிலும் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கு வளர்ந்து விடுவது கண்டு, இதனால் தன் ஆதிக்கத்திற்கு ஆபத்து நேரிடுமோ என அஞ்சுகிறது. எனவேதான் அமெரிக்கா, சீனாவில் கம்யூனிசம் பரவாதபடி இருக்க சீனப் பாசிஸ்டு சியாங்கே—ஷேக்-குக்கு எவ்வளவோ உதவி செய்து பார்த்தது. அது பயன் படவில்லை. இப்போது பர்மாவிலாவது கம்யூனிசம் பரவாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கருதுகிறது. அமெரிக்காவின் கருத்துக்கிசைய நடந்தால்தானே பிரிட்டனுக்கு அமெரிக்காவின் உதவி கிடைக்கும்— எனவே பிரிட்டனும் பர்மாவில் கம்யூனிசம் பரவக் கூடாது என்று "கருத" ஆரம்பித்தது! பிரிட்டனின் ஆசைப்படி நடந்தால் தானே காமன்வெல்த் நாடுகளுக்கு பிரிட்டனின் துணை கிடைக்கும் ஆகவே இந்த நாட்டு சர்க்கார்களும் உடனே பர்மாவில் கம்யூனிசம் பரவக்கூடாது என்று "கருத" ஆரம்பித்து விட்டன. காமன்வெல்த்நாடுகள் பர்மாவுக்குப் பண உதவியும் போர்க்கருவி உதவியும் செய்யப்போவதன் இரகசியம் இதுதான்.

**4. பிராமணர்கள் சாதி வேற்றுமையை வளர்க்கிறார்கள் என்ற காரணத்திற்காக உங்கள் கழகம் அவர்களைத் தாக்குகிறது. இது நியாயந்தான். ஆனால் பிராமணரல்லாதாரிலும் பல சாதியினர் இதுபோலவே சாதி வேற்றுமையை வளர்க்கின்றனரே, ஏன் அவர்களைமட்டும் நீங்கள் தாக்கிப் பேசுவதில்லை?**

ஒரு பெரிய மரத்தை வெட்டிச் சாய்க்கவேண்டுமானால், அந்த மரத்தின் அடிப்புறத்தை வெட்டினால் போதாதா? மரத்தின் நுனிக்கிளைகள் ஒவ்வொன்றையுமா துண்டு துண்டாக வெட்டிக் கொண்டிருக்க வேண்டுமா?

ஒரு பெரிய பங்களாவில் எரியும் எண்ணற்ற மின்சார விளக்குகள் யாவற்றையும் நிறுத்தவேண்டுமானால், அந்த விளக்குகள் யாவற்றையும் ஒருங்கே நிறுத்தக்கூடிய தலைமை விசையை (Main Switch) அழுத்தினால் போதாதா? ஒவ்வொரு விளக்கையும் தனித்தனியாகவா சென்று அணைத்துக்கொண்டிருக்க வேண்டும்?

ஒரு விஷநீர் ஊற்றிலிருந்து பெருக்கெடுத்தோடி வரும் தண்ணீரின் விஷத்தன்மையிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் நேரடியாக அந்த ஊற்றினருகே சென்று அந்த ஊற்றை அடைத்து விட்டால் போதாதா? இந்த ஊற்றுத் தண்ணீரோடு கலப்பதால் மட்டும் விஷத்தன்மை அடைவதன்றி, மற்றபடி தம்மளவில் விஷத்தன்மை அற்ற, தூய தண்ணீர் தரும் வேறு ஊற்றுகளையுமா அடைத்துவிடவேண்டும்?

பிராமணரிடம் இருக்கும் சாதித் துவேஷம் அடிமரத்தைப் போன்றது; தலைமை விசையைப் போன்றது; விஷநீர் ஊற்றுப் போன்றது. பிறரிடம் இருக்கும் சாதித் துவேஷங்களோ கிளைமரங்களைப் போன்றவை; சில்லறை விசைகளைப் போன்றவை; பிற நீர் ஊற்றுகளைப் போன்றவை.

பிராமணரிடம் இருக்கும் சாதித் துவேஷத்தைமட்டும் தாக்கி பிறரிடம் உள்ள சாதித் துவேஷங்களை நாங்கள் அவ்வளவாகத் தாக்காதிருக்கும் காரணம் இப்போது புரிகிறதல்லவா உமக்கு? இந்தத் தலைமைத் துவேஷம் தான் அந்தச் சில்லறைத் துவேஷங்களின் உற்பத்தி நிலையம் உற்பத்தி நிலையத்தையே அடியோடு அழித்துவிட்டால் பிறகு சில்லறைத் துவேஷங்கள் எப்படித்தோன்ற முடியும்? முடியுமா? எண்ணிப் பாரும். ஐயமிருந்தால் மீண்டும் கேளும். அடுத்த வாரம் பதில் கூறுகிறேன்.

**5. எங்கள் கிராமத்தில் ஆண்டுக்கொரு முறை திரௌபதியம்மன் திருவிழாவின் போது, நெருப்பை வளர்த்து, அதில், அரோகரா கோஷத்துடன் நடக்கிறார்கள். அதைப் பார்த்து என் நண்பர் ஒருவர் அது தெய்வசக்தி—அதனால்தான் நெருப்பு அவர்களைச் சுடுவதில்லை என்று வாதிக்கிறார். அவர் வாதம் உண்மையா?**

அது உண்மையல்ல வெறும் புரட்டு என்பதை, வாதத்தால் அல்ல, சொற்பொழிவால் அல்ல, கட்டுரையால் அல்ல, நேர்முகமாக, நடைமுறையில் காட்டுவதற்காகத் தான், நீர் குறிப்பிடும் தெய்வசக்தியில் சிறிதும் நம்பிக்கையில்லாத திராவிடர் கழக இளைஞர்கள் பல எத்தனையோ ஊர்களில், மதவாதிகள் நெருப்பு மிதிக்கும் அதே நேரத்தில், அதே நெருப்பின் மீது நடந்து காட்டி இருக்கின்றனர். சென்ற ஆண்டு, செங்கற்பட்டு மாவட்டம் மாளம்பதி கிராமத்தில் நெருப்பு மிதி விழா நடந்தபோது குளித்து முழுகி, மஞ்சள் ஆடை அணிந்து, மதப்பற்றாளர்கள், ம ஒலிகள் முழங்கிய வண்ணம் நெ ப்பில் இறங்கத் தயாராக ஒரு பு தில் வந்து கொண்டே இருந்தன அவர்கள் நெருப்பில் இறங்குவத குள்ளாக, கழக இளைஞர்கள் ஐ தாறு பேர், மஞ்சள் ஆடையை அல்ல— கருப்புச் சட்டையை அணிந்தவர்களாய், அரகர ஒ களை அல்ல— திராவிடநாடு திரா டர்க்கே ஒலிகளை முழங்கிய வண்ணம் நெருப்பில் இறங்கி சாதாரணமாக நடந்து வெளியே வந்தன நான் இதை நேரில் இருந்து கண் டேன். இதுபோலே கிட்டத்தட் நூறு கிராமங்களில் நெருப்பு மிதி துக் காட்டி இருக்கின்றனர் கழ இளைஞர்கள். நெருப்பு மிதிப்ப தெய்வ சக்தி என்கிறாரே உம் நண் பர், அவருக்கு இச்சேதியை கூறும்! கூறி, அவர்மனதைக் க விக் கொண்டிருக்கும் மூட பிக்கையை அகற்றும்.




தொடர்கதை :

ஐந்தாம் பகுதி

## குளிர் பூஞ்சோலை

"வாழ்க்கை இருக்கிறதே, தம்பி, அது வசதியுள்ளவர்களுக்குத்தான் தித்திக்கும் தேன்! தென்றல் தவழ்ந்துவரும் குளிர் பூஞ்சோலை! இளம் மங்கையின் புன்னகை! பொருள் அற்றவர்களுக்கு — அல்லலும் தொல்லையும் மிக்கவர்களுக்கு—அது கொட்டும் தேள்! சீறும் விஷப் பாம்பு! முள் புதர்!"

"ஐயா, சேரநாடு செழிக்க, வேந்தனை வஞ்சக வலையிலிருந்து மீட்க வழிகள் பல கூறுவதாகச் சொல்லி இங்கு அழைத்து வந்தீர்! திடீரென்று வாழ்க்கையின் தத்துவத்தைக் குறித்துக் கூறத் தொடங்கிவிட்டீர்களே?"

"ஏன் அப்பா அவசரப்படுகிறாய்? அமைதியும் பொறுமையும் அவசியம் தம்பி, இது போன்ற செய்திகளை அறிந்து கொள்ளவும், புரிந்து நடக்கவும்! ...இப்பொழுது நாம் எங்கு இருக்கிறோம்?"

"பூஞ்சோலையில்!"

"இதற்கு முன் எங்கிருந்தோம்?"

"மலைக் குகையில்!"

"எப்படி இங்கு வந்தோம்?"

"ஐயா, இதென்ன கேள்வி?"

"கேள்வி நீ போடாதே, கேட்பவைகளுக்கு மட்டும் பதில் தந்து கொண்டு வா—அது போதும்! கடைசியில் எல்லாம் தானாகவே புரியும்......இப்பொழுது கூறு, இங்கு எப்படி நாம் வந்தோம்?"

"கொட்டும் வியர்வையோடு கொடும் வெய்யிலில் நடந்து இங்கு வந்தோம்!"

"இப்பொழுது இங்கு எப்படி இருக்கிறது?"

"தென்றல் குளிர்ந்தடிக்க, மலர்களின் மணம் மெல்லென வீச, இன்பமாக—குளிர்ச்சியாக—இருக்கிறது!"

"பேசாதிரு—உற்றுக்கேள்—உன் காதுகளில் என்ன விழுகிறது?"

"குயிலின் இனிய கானம்!"

"இப் பக்கம் திரும்பு—இப்படிப்பார்—என்ன காண்கிறாய்?"

"செழித்து வளர்ந்து பச்சைப் பசேலென விருக்கும் செடி, கொடி, மரங்கள்......"

"இவை உன் கண்களுக்குத் தோன்றுகின்றன! சரி! பின் பக்கம் பார்வையைத் திருப்பு—நாம் நடந்து வந்த திசையைக் கவனி—எப்படி இருக்கிறது?"

"கரடு முரடாக, கல்லும் முள்ளும் நிறைந்து—பார்ப்பதற்கே அருவருப்பும் அச்சமும் உண்டாகும் விதத்தில் இருக்கிறது!"

"தம்பி, கேட்டவைகளுக்கு ஏற்ற முறையில் தக்கபதில்கள் தந்தாய்............இப்பொழுது புரிந்துகொண்டாயா?"

"எதனை?"

"எதனையா? நான் சொல்லியவற்றை—என் கருத்தை!"

"விளக்கமாகக் கூறினால்...."

"புரிந்துகொள்வாய் — நீ என்ன, குழந்தைகூடத்தான் புரிந்துகொள்ளும்!.........உன் விழிகள் என்னைப் பார்க்கட்டும்! காதுகள் சொற்களைக் கவனிக்கட்டும்! உள்ளம் கருத்தைச் சிந்திக்கட்டும்!"

"சரி, அப்படியே செய்கிறேன்!"

"தம்பி, நாம் சிந்தனைச் சிற்பிகளாக விருக்கலாம், நிகரற்ற நிபுணர்களாகவும் இருக்கலாம்! சொல்லின் செல்வர்களாகவும், ஆற்றலின் வீரர்களாகவும், அறியாமை இருளைப் போக்கும் கதிரவன்களாகவும் கூட நாம் இருக்கலாம்! ஏற்படலாம் அதனால் பூரிப்பும் பெருமிதமும் நமக்கு! நம்மிருப்பிடம் குகையாக—வெளி உலகத்தொடர்பற்ற இடமாக—இருந்துவிட்டால் உலகத்திற்கு நம்மால் எள்ளளவு நன்மையும் ஏற்படாது! ஏற்படுத்த முடியாது! வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் தமக்கென்று ஓர் இலட்சியமிருக்க வேண்டும்! ஆம், எப்படிப்பட்டவனுக்கும் இது முக்கியம். இலட்சியப் பாதை — கல்லும் முள்ளும் நிறைந்ததாகத்தான் அநேகமாக இருக்கும்! அந்தப் புனிதமான—உயரிய—பாதையில் படுபள்ளங்கள் இருக்கலாம், நடந்து செல்லுகையில் சாலையோரங்களிலிருந்து பாம்புக்கூட்டம் விரைந்து ஓடிவரலாம் கடித்துக்கொல்ல! முள்மரங்கள் கண்களைக் குத்தி இரத்தத்தைக் கொட்டச் செய்து, குருடர்க

ளாக்கிவிடலாம்—ஆனால் எதற்கும் அஞ்சக்கூடாது! அப்படிப்பட்ட உள்ள உரம் பெற்ற பிறகுதான் அப் பாதையில் காலடி எடுத்துவைக்க வேண்டும்! அதுவரைக்கும் குகையிலேயே இருக்கலாம் — அதிலொன்றும் தவறு இல்லை! ஆனால் காலம் முழுவதும் குகையிலேயே இருந்துவிடக்கூடாது, கட்டாயம் வெளியில் வந்தேதான் தீரவேண்டும்! மனதிடத்தோடு, அச்சமும் அயர்வுமின்றி, இலட்சியப் பாதையைக் கடந்துவிட்டால், நாம் காண நினைத்த, காத்திருந்த, குளிர் பூஞ்சோலைக்கு—வாழ்க்கையின் இலட்சிய முடிவிற்கு — வந்து சேர்ந்துவிடுவோம்! அதன்பிறகுதான் நாட்டில், பகுத்தறிவுத் தென்றல் வீசும், புது வாழ்வு மலர் விரிந்து மணம் கமழும், தமிழின் குயில் இசை எப் பக்கமும் கேட்கும், நல் வாழ்வு பெற்று பச்சைப் பசேலென செல்வத்தோடும் வளத்தோடும் மக்கள் வாழ்வார்கள்!......புரிகிறதா தம்பி?”

“ஐயா, நன்றாகப் புரிகிறது! ஆனால் ஒரு ஐயம்.........”

‘சொல் தம்பி, சொல்!”

“முதலில், வசதியுள்ளவர்கள் வாழ்க்கை தேன் என்றீர், அது அற்றவர்கள் வாழ்க்கை கொட்டும் தேள் என்றீர்......”

“ஆமாம்!”

“அதனை ஏன் கூறினீர்?”

கிழவன் தூயமணியைப் பார்த்துச் சிரித்தான்! பொல்லாக் கிழவனின் கேலிப் பார்வையைப் பார்க்கச் சகியாதவனாக வீரன் தலையைத் தாழ்த்திக் கொண்டான்! குனிந்த தலையை நிமிர்த்துவிட்டு, கிழவன் பேசினான்!

“தாய் வயிற்றில் பத்து மாதங்கள் இருந்து விட்டுதான் எல்லோரும் பிறக்கிறார்கள்! பிறந்தானதும், ஒரு சிலர் மட்டும் சுக வாழ்வும், பற்ற பலர் வேதனை வாழ்வும் பெறுகிறார்கள்! அப்படிப்பட்டவர்களின் நிலையை விளக்கவே அவ்விதம் கூறுகிறேன்! எல்லோர் வாழ்க்கையும் தித்திக்கும் தேனாகவும், தென்றல் தவழ்ந்துவரும் பூஞ்சோலையாகவும், இளம்மங்கையின் புன்னகையாகவும் இருக்க வேண்டுமென்பதே என் ஆசை! என்வாழ்க்கையின் இலட்சியம்! இந்த குறிக்கோள் ஈடேற, சேர நாடு செழிக்க, சேர மன்னன் வஞ்சக ஆரியரின் மாய வலையிலின்று மீளவேண்டும்! அவனால் மீள முடியாது, நாம் மீட்டு விட வேண்டும்!...........”

“ஆரியரின் மாய வலை என்கிறீரே—என்னால் அதனைப் புரிந்துகொள்ளவும், நம்பவும் முடியவில்லை”

கிழவன் புன்னகை செய்துவிட்டு, “உனக்குப் புரியாததில் என்ன தம்பி ஆச்சரியம்! நீ போர் வீரன்! உன் மன்னனுக்கும் நாட்டு மக்களுக்கும், ஏட்டில் எழுத்துக்களைக் கோர்த்துக் கோர்த்து எழுதிக்கொண்டிருக்கும் கவிஞர்களுக்குமே இது இன்னும் புரியவில்லை!” என்று கூறிவிட்டு எழுந்தான். வீரமணியும் எழுந்தான்!

“தம்பி, நான் கூறப்போவதெல்லாம் உனக்குப் பிடித்துவிட்டால், நீ பல கஷ்டங்களுக்கு உள்ளாக வேண்டியிருக்கும்! தொல்லைகள் பல உன்னைத் தேடிவரும்! தயாரா?”

“தடை ஏதுமில்லை!”

இருவரும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள்!

“தம்பி, உற்றுக் கேள்! இப்படி வா! ஒளிந்து கொள்ளலாம்!”

கிழவன் வீரனை இழுத்துக் கொண்டு, அங்கேயிருந்த ஒரு பெரிய மரத்தின் பக்கமாக மறைந்து நின்றான்!

“குதிரைகள் வரும் சப்தமல்லவா கேட்கிறது?”

“ஆமாம்! குதிரைகளின் காலடி ஒலிதான்! வருபவர்களின் கண்ணில் நாம் படக்கூடாது! பத்திரம்!”

“யார் வருகிறார்கள்?”

“எனக்கெப்படி தெரியும், தம்பி! வருவது யாராக இருந்தாலும், அவர்கள் நம்மைப் பார்த்துவிடக்கூடாது! கண்டுவிட்டால் நம் திட்டங்கள் சுக்குநூறாகச் சிதறிவிடும்! தெரிகிறதா?”

இருவரும் பேசாதிருந்தனர். வர வர குதிரைகளின் காலடியோசை அதிகரித்துக் கொண்டே வந்தது! இரண்டு குதிரைகளில் இருவர் ஏறிக் கொண்டு வருவது சிறிது நேரத்தில் தெரிந்தது!

“அரசர் அல்லவா வருகிறார்?”

“ஆமாம்! அவர் பக்கத்தில் ஆரிய மதக் குருவும் வருகிறார் கவனி”

“ஆமாம்!”

“இப்பக்கமாகத்தான் வருகிறார்கள்! சொன்னது நினைவிருக்கட்டும்”

பூஞ்சோலையின் பக்கமாக மன்னனும். மதக்குருவும் குதிரையின் மீது சென்றனர். அவர்கள் சென்ற சிறிது நேரத்தில் கிழவனும் தூயமணியும் சோலையைவிட்டு வெளியே வந்தனர்.

“எங்கு அவர்கள் செல்கிறார்கள்?”

“அதுதான் தம்பி நானும் யோசிக்கிறேன்!”

“வேறு ஆட்கள் உடன் வராமல் வேந்தர் வேதியனுடன் செல்லும் காரணம்........”

“நாம் கண்டு பிடிக்க வேண்டியது! புறப்படு!”

(7-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
... 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons